செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

நாள்: 14.08.2026

# செம்மொழித் தமிழ் மின் நூலகம்

*நடத்தும்*

**தேசிய அளவிலான மொழிசார்**

## தொழில்நுட்பப் படைப்பாக்கப் போட்டி - ஆரெக்ஸ் ’26

# Classical Tamil Digital Library

*Organizes*

**National Level Lingual**

## Tech Hackathon - AUREX’26

**(23.09.2026 & 24.09.2026) (தொடர்ந்து 24 மணிநேரம்)**

### அறிவிப்பும் அழைப்பும்

தொன்மையான தமிழ் மொழியின் சிறப்புகளையும், சங்க இலக்கியங்களின் மேன்மையினையும் நவீன மின்னணுத் தளங்களுக்குக் கொண்டு சேர்ப்பது தற்காலத் தேவையாகும். மாறிவரும் செயற்கை நுண்ணறிவு காலத்திற்கு ஏற்ப செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் பல்வேறு ஆய்வு முன்னெடுப்புகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது. அவ்வகையில் தமிழ் மொழியோடு நவீனத் தொழில்நுட்பத்தை இணைத்துப் பல புதிய தொழில்நுட்பத் திறன்களை வெளிக்கொணரும் நோக்கில் இப் படைப்பாக்கப் போட்டியை நடத்த முன்னெடுத்துள்ளது.

Aurex'26 என்பது வெறும் நிரலாக்கப் போட்டி மட்டுமல்ல; அது மொழி, பண்பாடு மற்றும் நவீனத் தொழில்நுட்பத்தின் சங்கமம். பயனுள்ள தீர்வுகளை உருவாக்கக்கூடிய மாணவர்களையும் இளம் புதுமையாளர்களையும் ஒன்றிணைக்கும் மொழி சார்ந்த தொழில்நுட்பப் புதுமைப் போட்டிக்கான தளமாக இது விளங்கும்.

**<u>போட்டியின் முதன்மை நோக்கங்கள்</u>**

- ***கணினித்தமிழின் வளர்ச்சி***: தமிழ் மொழியைச் செயற்கை நுண்ணறிவு (AI), இயற்கை மொழி செயலாக்கம் (NLP) மற்றும் நவீன மென்பொருள் தளங்களில் முதன்மை மொழியாக மாற்றுதல்.
- ***சங்க இலக்கியங்களின் மறுமலர்ச்சி***: தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற 41பழந்தமிழ் இலக்கியங்களை எளிய வழிகளின் மூலம் இளைய தலைமுறையினருக்குச் சென்றடையச் செய்தல்.
- ***மாணவர் மற்றும் இளைஞர் திறனறிதல்***: தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் படைப்பாற்றல் திறனைத் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துதல்.
- **மொழி வளத்தைக் காத்தல்:** பழமை மாறாமல், நவீன தொழில்நுட்பக் தளங்களான செயலிகள் (Apps), வலைத்தளங்கள், மற்றும் AI சாட்பாட்கள் (Chatbots) வாயிலாகச் சங்கத் தமிழை எளிய முறையில் தற்கால இளைஞர்களுக்குக் கொண்டு சேர்த்தல்.

இப்போட்டியானது கீழ்க்கண்ட முதன்மைத் துறைகளில் நடைமுறை சார்ந்த தீர்வுகளை (Practical Solutions) உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது:

1. பயிற்சி மற்றும் கற்றல் மேலாண்மைத் தளம் (LMS Website)
2. தமிழ் எழுத்துணரி (Tamil OCR)
3. சொல்வலை (WordNet)
4. தமிழ்க் கற்றல் தளம் (Tamil Learning Portal)
5. செயற்கை நுண்ணறிவு உரையாடல் செயலிகள் (AI Chatbots)
6. திறந்தவெளிப் புத்தாக்கம் (Open Innovation)

என்னும் 6 தடங்கள் மூலம் 60 அணிகள் 180 பங்கேற்பாளர்களுடன் இந்தத் தொழில்நுட்பப் புதுமைப் போட்டியை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இப்போட்டி **23.09.2026 காலை 10.00 மணி**முதல் **24.09.2026 காலை 10 மணி** முடிய **தொடர்ந்து 24 மணி நேரம்** நடைபெறவுள்ள நிலையில் **பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் மட்டும்** கலந்துகொண்டு பயன்பெற அழைப்பு விடுக்கப்படுகிறது.

**படைப்பாக்கப் போட்டியின் விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை - **180.**
- **பதிவுக்கட்டணம் இல்லை.**
- போட்டி நடைபெறும் நாள்கள்: **23.09.2026 காலை 10 மணி முதல் & 24.09.2026 காலை 10 மணி வரை (தொடர்ந்து 24 மணி நேரம்).**
- போட்டியில் பங்கேற்க விரும்புவோர், அதன் விரிவான விதிமுறைகளை அறிந்துகொள்ளவும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும் https://aurexcict.in/ என்ற இணையத் தளத்தைப் பார்க்கவும்.
- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **01.09.2026.** காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் எற்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **10.09.2026** அன்று மின்னஞ்சல் / புலனம் வழியாக மட்டுமே அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.

**இயக்குநர்**